# டிசம்பர் – 21– வியாழன்

**புனித பீற்றர் கனியுஸ்**

**யாழிசைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்: பதின் நரம்பு யாழினால் அவரைப் புகழ்ந்து பாடுங்கள்: திபா. 33:2**

## முதல் வாசகம் : இனிமைமிகு பாடல் 2 : 8- 14

என் காதலர் குரல் கேட்கின்றது. இதோ, அவர் வந்துவிட்டார் மலைகள்மேல் தாவி வருகின்றார் குன்றுகளைத் தாண்டி வருகின்றார். என் காதலர் கலைமானுக்கு அல்லது மரைமான் குட்டிக்கு ஒப்பானவர். இதோ, எம் மதிற்சுவர்க்குப் பின்னால் நிற்கின்றார் பலகணி வழியாய்ப் பார்க்கின்றார். பின்னல் தட்டி வழியாய் நோக்குகின்றார். என் காதலர் என்னிடம் கூறுகின்றார் "விரைந்தெழு, என் அன்பே! என் அழகே! விரைந்து வா. இதோ, கார்காலம் கடந்துவிட்டது. மழையும் பெய்து ஓய்ந்துவிட்டது. நிலத்தில் மலர்கள் தோன்றுகின்றன. பாடிமகிழும் பருவம் வந்துற்றது. காட்டுப் புறா கூவும் குரலதுவோ நாட்டினில் நமக்குக் கேட்கின்றது. அத்திப் பழங்கள் கனிந்துவிட்டன. திராட்சை மலர்கள் மணம் தருகின்றன. விரைந்தெழு, என் அன்பே! என் அழகே! விரைந்து வா." பாறைப் பிளவுகளில் இருப்பவளே, குன்றின் வெடிப்புகளில் இருக்கும் என் வெண்புறாவே! காட்டிடு எனக்கு உன் முகத்தை. எழுப்பிடு நான் கேட்க உன் குரலை. உன் குரல் இனிது! உன் முகம் எழிலே!

**பதில்பாடல் :** நீதிமான்களே புதியதொரு பாடல் ஆண்டவருக்குப் பாடுங்கள்

## நற்செய்தி : லூக்கா 1 : 39 - 45

அக்காலத்தில் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்த குரலில், "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் நாம் வாசிக்கும் போது இறைவனின் அருளைப் பெறுவது மிகப்பெரிய பேறு. அதற்கு ஈடுஇணை இந்த உலகத்தில் வேறு எதுவும் கிடையாது அதற்கு மேல் பெற்ககூடிய சிறப்பு இந்த உலக்தில் இல்லை. மரியாளுக்கு இறைவனின் வார்த்தை அறிவிக்கப்பட்ட போது இத்தகைய நிகழ்ச்சி மரியாவுக்குள் நிறைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் வானதூதர் மரியாவைப் பார்த்து “அருள் மிக்கப் பெற்றவரே வாழ்க” என்று வாழ்த்துகின்றார், கடவுளுடைய அருளை மரியா பெற்றிருக்கின்றார் என்பது தான் இதனடைய பொருளாகும். அதே வேளையில் கடவுளின் அருள் மற்றொரு அனுபவத்தையும் தாங்கியதாக இருக்கும். அதுதான் மரியாவின் இருதயத்தை வாளாக ஊடுருவ இருப்பதாகும். கடவுளின் அருள் கொடுக்கப்படுவது பெற்றுக்கொண்டு வைத்திருப்பதற்கு மட்டுமல்ல அது மற்றவர்களுக்கும் வழங்கப்படுவதற்காக கொடுக்கப்படுகின்றது. அதில் நமது வாழ்வில் தியாகம் செய்ய வரலாம், பல இழப்புக்களை சந்திக்கலாம். ஆனால் கடவுளின் அருளை பெறுவதற்கு, எதையும் இழப்பதற்கு தயாராக இருக்கின்றேன் என்பது தான் அன்னை மரியாவின் வாழ்வாக இருந்தது. நற்செய்தியிலே எலிசபேத்தம்மாவின் வயிற்றில் இருந்த குழந்தை மரியாவின் வருகையைக் கண்டு உணர்ந்தது. வயிற்றில் இருக்கக்கூடிய குழந்தை உணர்கின்றது என்றால் எந்த அளவுக்கு மரியா அருளால் நிரப்பப்பட்டிருந்தாள் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். மரியாவைப் போல தூய்மையான உள்ளத்தோடு நாமும் நாமும் வாழ்ந்திட அருள் தாரும் இறைவா. ஆமென்.